SRI V. K. KOTHANDARAMAN : வெள்ளை உப்பை உரத்தோடு சேர்த்து திருச்சி ஜில்லாவிலுள்ள அரியலூரில் விற்றதாக அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதுபோல் பல ஜில்லாக்களிலும் விற்பனை செய்ததாக அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆனால், இப்பொழுது இருக்கும் சட்டப்படி, நீதிபதிகள் மேலே பழியைப் போட்டு, 'இப்படித் தீர்ப்புக் கொடுத்துவிடுகிறார்கள்' என்று சொல்லிவிட்டால் போதாது. இருக்கும் சட்டபடிதான் அவர்கள் குறைந்த தண்டனையாக, ஐந்து ரூபாய், பத்து ரூபாய் என்று போடுகிறார்கள். ஆயிரக்கணக்கான அபராதம் போட்டால் கூட சம்பந்தப்பட்டவர்கள் கொடுக்கத் தயாராயிருக்கிறார்கள். ஏனென்றால், அவர்கள் பத்தாயிரக் கணக்காக கள்ள மார்க்கெட்டிலே விற்று லாபம் அடையக்கூடிய காரணத்தால். . . . . .

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் அவர்கள் பிரசங்கம் செய்யக்கூடாது. கேள்வியை மட்டும் கேட்க வேண்டும்.

SRI V. K. KOTHANDARAMAN : தண்டனை விதிக்கக்கூடிய அளவுபற்றி ஒரு விதி இருக்கவேண்டும். இதற்கு உடனடியாக கவனம் செலுத்த வேண்டும்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நீதிபதிகள் மீது நான் குற்றம் சாட்டுவதாகக் கனம் அங்கத்தினர் சொல்வது முற்றிலும் தவறானது. நான் அப்படியொன்றும் சொல்லவில்லை. தண்டனை கொடுப்பது பற்றித்தான் சட்டத்தில் இருக்கிறது. தண்டனை இவ்வளவுதான் கொடுக்கவேண்டும், என்று 'மாக்ஸிமம்' சாதாரணமாகப் போடுவதில்லை. 'மினிமம்' தான் போடுவது உண்டு நீதிபதி சில பேருக்கு அபராதம் போடுகிறார். சில பேருக்குச் சிறை தண்டனை கொடுக்கிறார். அபராதம் கட்டாவிட்டால் சிறை தண்டனை என்று போடுகிறார். நமக்குத் தோன்றுகிறபடியே சட்டம் செய்வது அவ்வளவு முறையாக இருக்காது.

Murder

* 378 *Q.*—SRI S. PAKKIRISAMI PILLAI : Will the Hon. the Minister for Home be pleased to state the result of Police investigation in regard to the murder of one Jayalakshmi, on 23rd August 1959 in Irulancheri village, Perambakkam post, Tiruvallur taluk?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The case was treated as undetectable.

SRI S. PAKKIRISAMI PILLAI : அந்தப் பெண்ணின் கணவனே கொலை செய்தான் என்ற புகார் இருந்தும் காணப்படும் நபரை விசாரியாமல் விட்டுவிட்டதற்குக் காரணம் என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதிலே பரிசீலனை செய்யப்பட்டபோது கிடைத்த சாட்சியங்களை வைத்துக்கொண்டு பப்ளிக் ப்ராசிக்யூடர் அபிப்பிராயம் கோரப்பட்டது. டாக்டர்

18th February 1961] [Sri M. Bhaktavatsalam]

சர்டிபிகேட் போதுமான சாட்சியம் அளிப்பதாக இல்லே. இருக்கக் கூடிய சாட்சியங்களை வைத்துக்கொண்டு ப்ராசிக்யூட் பண்ணு வதில் பயன் இல்லேயென்று அவர் சொல்லிவிட்டார்.

Women workers

* 379 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the steps taken by the Government to prevent the retrenchment of women-workers from the textile mills in Coimbatore due to the introduction of cone winding in the mills; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) The question of displacement of women-workers in textile mills in Coimbatore district due to the introduction of cone winding machines was discussed at a meeting of the State Labour Advisory Board (which is a tripartite one) held on 27th August 1960. The Board recommended that a conference of employers and trade unions might be convened during September to arrive at a solution of this problem and that in the meanwhile the mill owners in Coimbatore area might be advised to avoid retrenchment of women-workers. The Commissioner of Labour has accordingly requested the Chairman, Southern India Millowners' Association, to advise members (mills) to keep in abeyance any proposals for retrenchment of women labour pending consideration of the whole question by the Government. A conference of mill managements and trade unions was also convened by the Commissioner of Labour during October 1960, to explore the possibility of arriving at a solution of the problem. At the above conference, it was decided that a committee consisting of both the managements and labour should be formed to go into the implications and all aspects of the question in full and suggest ways and means to solve the problem.

The Government approved the above recommendations of the conference and authorized the Commissioner of Labour to take action accordingly. The report of the Commissioner of Labour on the action taken is awaited.

SRI N. K. PALANISAMI : ஸார், இந்தப் புதிய ஏற்பாட்டினுல் நாற்பது பேர் வேலே செய்த இடத்தில் பத்துப் பேர்களுக்குத்தான் வேலே இருக்கிறது. பாக்கியுள்ள 30 பேர்கள் வேலே இழக்கவேண்டியிருக்கிறது. முக்கூட்டுக் கமிட்டியிலும் சரி, தொழிலாளர்களோடு, முதலாளிகளோடு நடத்திய பேச்சு வார்த்தையிலும் ஆடமாடிக் ஓம்ஸ் கொண்டு வருவதனுல் ஏற் கனவே வேலேயில் இருக்கிறவர்களுக்கு எவ்வித பாதகமும் ஏற்படாத வகையில் பாதுகாப்பு கொடுக்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கு விரோதமாக நடந்து கொண்டவர்கள்மீது நடவடிக்கை எடுக்க குறிப்பாக கன்ண பிரான் மில்ஸில் கோயம்பத்தூரில் . . . . . .

MR. SPEAKER : The hon. Member should not mention the name of an individual mill. If he does it, I will not allow him to proceed further.